டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.10.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 093 - Madurai | Online Edition

# இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளை எடுத்துக்காட்டும் தளமாக திரவ்யா இணையதளம் உள்ளது

## மத்திய அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தகவல்

புது தில்லி, அக்.10

ஆயுஷ் துறையில் நூற்றுக்கும் மேற்பட்ட முக்கிய மருந்துகள் குறித்த தகவல்கள் அடங்கிய பட்டியலை தொடர்ந்து மேம் படுத்தும் வகையில் பிரத்யேக மென்பொருளுடன் கூடிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. திரவ்யா எனப்படும் இந்த இணையதளம் வாயிலாக முதற்கட்டமாக பல்வேறு மருந்துகள் குறித்த தரவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

ஆயுர்வேத அறிவியலில் ஆராய்ச்சிக்கான மத்திய குழுமம் மேற்கொண்டுள்ள இந்த முன்முயற்சி காரணமாக டிஜிட்டல் அடிப்படையிலான இந்த தரவு தளம் அத்துறை சார்ந்த புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் பல்வேறு அம்சங்கள் குறித்து அறிந்து கொள்ள வகை செய்கிறது.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இணையதளம் ஆயுஷ் துறையில் உள்ள பல்வேறு அமைப்புகளிடையே இணைப்பை ஏற்படுத்து வதுடன், மருந்துகள் மற்றும் அது தொடர்பான மூலப்பொருள்கள் குறித்த பிற அமைச்சகங்களின் கொள்கைகள் போன்ற அம்சங் களையும் ஒருங்கிணைக்கிறது. இந்த இணைய தளத்தில் விரைவாக தகவல்களை ஒருங்கிணைப்பதற்கான குறியீடு, தோட்டங்களில் வளர்க்கப்படும் மருத்துவ குணம் கொண்ட மூலிகைத் தாவரங்கள் குறித்த தகவல்களுக்கும், நாடு தழுவிய மருத்துவ களஞ்சியத்தை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

கடந்த மாதம் 23-ம் தேதி கோவாவில் நடைபெற்ற 10-வது ஆயுர்வேத தின நிகழ்ச்சியில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் இந்த இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. இது சான்றுகள் அடிப்படையிலான ஒருங்கிணைப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவ முறை குறித்த விவரங்களை டிஜிட்டல் வடிவமாக மாற்றுவதற்கும் வகை செய்கிறது.

பாரம்பரிய மருத்துவ முறைகள் குறித்த இந்தியாவின் அறிவுசார் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் டிஜிட்டல் வடிவிலான தளமாக இந்த இணையதளம் உள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். பாரம்பரிய மருத்துவ அறிவுடன் நவீன தொழில் நுட்பத்தை இணைப்பது ஆயுர்வேதம் மற்றும் இதர ஆயுஷ் மருத்துவ முறைகளுக்கு அறிவியல் ரீதியாக வலுவான அடித்தளம் அமைப்பதற்கும், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை பெறுவதற்கும் உதவிடும் என்று மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் கூறினார்.

# பிரதமரின் தன்-தானிய கிரிஷி யோஜனா திட்ட துவக்க விழாவில் கலந்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு

விருதுநகர், அக்.10

100 பின் தங்கிய வேளாண் மாவட்டங்களை மேம்படுத்த பிரதமரின் தன்-தானிய கிரிஷி யோஜனா திட்டத்தை நம் பாரத பிரதமர் 11.10.25 அன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார். அதன் நேரடி காட்சிகளை விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காட்சிப்படுத்த திட்டமிட பட்டுள்ளது. தொடர்ந்து இயற்கை வேளாண்மை பயிற்சிகள் நடைபெற இருப்பதால் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தவறாமல் 11.10.25 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு காலை 9.30 வருகை தந்து தாங்கள் பெயரை பதிவு செய்து கொண்டு இந்த சிறப்பு நிகழ்ச்சி மற்றும் பயிற்சியில் கலந்து கொண்டு இந்த திட்டத்தின் முக்கியத்து வத்தை பற்றி தெரிந்து கொண்டு பயனடையுமாறு வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்விரமேஷ் கேட்டு கொள்கிறார்கள்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம்



புதுக்கோட்டை, அக்.10

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் இடையார் கிராமத்தில் உழவரைத் தேடி வேளாண் உழவர் நலத்துறை திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வேளாண் பயிர் பாதுகாப்பு அடங்கிய காலண்டரை மேலாண்மை உதவி இயக்குனர் பத்மபிரியா வழங்கினார்.

மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட அறந்தாங்கி உதவி இயக்குனர், சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தோட்டக் கலைத்துறை உதவி தோட்டக்கலை அலுவலர் கஸ்தூரி, தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் கூறி விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் தொகுப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை கண்காணிப்பாளர் விவசாய விளை பொருள்கள் விற்பனை வாய்ப்பு பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை அலுவலர் பாக்கியா, துறை சார்ந்த அரசு திட்டங்களை தெளிவாக விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். முன்னோடி விவசாயிகளை ஒருங் கிணைத்து நிகழ்ச்சி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தராஜ் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உலக வன விலங்கு வாரம்

கோயம்புத்தூர், அக்.10

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (AEC & RI), கோயம்புத்தூர் "ஈகோ கிளப்" (Eco Club) சார்பில், உலக வன விலங்கு வாரத்தையொட்டி "வனவிலங்கு" என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினர் சொற்பொழிவு 8-10-25 ஆம் தேதி நடைபெற்றது.

வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ரவிராஜ் தலைமை தாங்கி, மாணவர்கள் இயற்கை பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயலில் ஈடுபட வேண்டும் என ஊக்கு வித்தார். இயற்கையுடனும் மனிதனுடனும் சமநிலை பேணப்படும் போது மட்டுமே நிலைத்த வளர்ச்சி சாத்தியம் என அவர் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக கே. நிர்மலா, வனச்சரக அலுவலர் மற்றும் ஓ.ரங்கநாதன், வனச்சரக அலுவலர் கலந்து கொண்டு, தங்கள் துறையில் பெற்ற அனுபவங்கள், வன விலங்கு பாதுகாப்பில் எதிர்நீச்சல்கள் மற்றும் மனிதன் - வன விலங்கு இணக்க வாழ்வு குறித்து ஆழ்ந்த கருத்துக்களை பகிர்ந்தனர்.

இந்த நிகழ்வு "சேவா பார்வ்" (Sewa Parv) என்ற தலைப்பில் இயற்கைக்கு சேவை மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாணவர்களுக்கு வன விலங்கு பாதுகாப்பு, காடுகளின் முக்கியத்துவம் மற்றும் உயிர் பல்வகைமையை பேணுவதின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும். மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்ட இந்த நிகழ்வு, வன விலங்கு பாதுகாப்பு ஒவ்வொருவரின் பொது பொறுப்பு என்பதை வலியுறுத்தி, சுற்றுச்சூழல் மீதான அக்கறையை வளர்க்கும் நோக்கத்துடன் நிறைவடைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# என்.பி.வி. வைரஸ் பயிர்களின் பாதுகாவலனா?

விருதுநகர், அக்.10

பயிர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நல்லது செய்கிற வைரஸ் உள்ளதா? ஆம். உள்ளது.

நாம் சாகுபடி செய்கின்ற பயிர்களில் 30 முதல் 40 சதவீதம் புழுக்கள் வகை பூச்சிகளால் சேதாரம் ஏற்பட்டு விளைச்சல் பாதிக்கப்படுகிறது. புழுக்களை கட்டுப்படுத்த பெரும்பாலும் அனைத்து விவசாயிகளும் பூச்சி மருந்து கடைகளில் ரசாயன







மருந்துகளை மட்டுமே வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இரசாயன மருந்திற்கு மாற்றாக இயற்கை வழியில் வைரஸ் நோய் தாக்கப்பட்ட புழுக்களில் இருந்து ஆய்வகத்தில் வைரஸ் காரணிகளை பிரித்து உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை பயிர்களில் தெளிக்கும் போது பயிர்களை உண்ணும் புழுக்கள் வைரஸ் நோய் தாக்கம் ஏற்பட்டு இறந்துவிடும். இந்த வைரஸ் காரணிகள் புழுக்களை மட்டுமே பாதிப்பு உண்டாக்கும் திறன் படைத்தது. மனிதர்களையோ, விலங்கினங்களையோ, பறவை களையோ பாதிக்காது. சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுத்தாது.

விருதுநகர் மாவட்ட உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நடப்பு ஆண்டில் 1000 லிட்டர் என்.பி.வி. மருந்து உற்பத்தி செய்யப்பட்டு மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. இதன் விலை ஒரு லிட்டர் 850 ரூபாய். 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. 100 மி.லி. 43 ரூபாய்க்கு விநியோகம் செய்யப்படுகிறது. என்.பிவி கரைசல் ஒரு ஏக்கருக்கு 100 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

### என்.பி.வி கரைசல் தெளிக்கும் முறை



ஒரு ஏக்கருக்கு 100 மில்லி வைரஸ் கரைசல் டி கிலோ நாட்டுச் சர்க்கரை, கலந்து மாலை வேலையில் தெளிக்க வேண்டும். தெளித்த வயலில் உள்ள புழுக்கள் உடனே சாகாது வைரஸ் தாக்கப்பட்ட புழுக்கள் 5 நாட்கள் சாப்பிடாமல் நிறம்மாறி ஆங்காங்கே தலை கீழாகத் தொங்கும். வைரஸ் தாக்கிய புழுக்களை சேகரித்து வைரஸ் கரைசல் நாமே தயாரித்து பயன்படுத்தலாம். தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் வாங்கி பயன்பெறலாம் என விருதுநகர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன் தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற்று பரிசு பெற அழைப்பு

சேலம், அக்.10

சேலம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு வரும் எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் வருடத்திற்கு 20000 ஹெக்டர் பரப்பளவுக்கு மேல் சித்திரை முதல் ஆடிப்பட்டம் வரை மானாவாரி மற்றும் இறவை பயிராகவும், கார்த்திகை பட்டத்தில் இறவை பயிராகவும் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு நிலக்கடலை பயிரில் பயிர் விளைச்சல் போட்டி அறிவித்துள்ளது.

அதாவது நிலக்கடலையில் பயிர் விளைச்சல் போட்டியில் மாநில அளவில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.2.5 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.1.5 இலட்சமும், மூன்றாம் பரிசாக ரூ.1 இலட்சமும் தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கி ஊக்குவிக்கிறது.

பயிர் விளைச்சல் போட்டி கலந்து கொள்வதற்கு ஒரு ஹெக்டருக்கான நுழைவு கட்டணமாக ரூ.150/- செலுத்தினால் மட்டும் போதும்.

நிலக்கடலை சாகுபடி செய்ய இருக்கும் போது நிலத்தை மிக ஆழமாக உழவு செய்யக்கூடாது. அதாவது 20 சென்டிமீட்டர் மேல் ஆழமாக போகும் போது விழுதுகள் இறங்குவது சற்று கடினம் மற்றும் நோய் தாக்குதல் அதிகரிக்கும். ஒரு வயலில் நிலக்கடலை சாகுபடி செய்துவிட்டு மீண்டும் அதே வயலில் நிலக்கடலை சாகுபடி செய்யும் போது அதன் பயிர் கழிவுகளை முழுமையாக அகற்ற வேண்டும். இல்லையெனில் அடுத்த பயிரில் வேர்அழுகல் அல்லது கழுத்து அழுகல் நோய் அதிகம் காணப்படும்.

விதையை நிலத்தில் விதைப்பதற்கு 4 முதல் 5 நாட்களுக்கு முன்னதாக மட்டும் விதை நிலக்கடலையை உடைத்து பருப்புகளை எடுக்கவும். இல்லையெனில் முளைப்பு திறனில் பாதிப்பு ஏற்படும். நாம் பயிர்களுக்கு இடும் மணிச்சத்து மற்றும்

சாம்பல்சத்து உரத்தினை சுமார் 15 சென்டிமீட்டர் ஆழத்தில் இடவேண்டும். இந்த உரத்தினை மேலாக இடும் பொழுது விழுதுகள் போதுமான அளவு கால்சியம் சத்துக்களை எடுக்காமல் இருப்பதால் மகசூல் குறையும்.

மண்ணிற்கு தேவையான காற்றோட்ட வசதி, நிலக்கடலையின் விழுதுகள் நன்றாக வளர்வதற்கும் காய்கள் பிடிப்பதற்கும் மற்றும் அதில் பொக்குகள் வராமல் இருப்பதற்கு தேவையான கால்சியம் சத்தை நாம் ஜிப்சம் வடிவில் தருகிறோம். பூ பிடித்தலை ஊக்குவிக்க, ஒரே நேரத்தில் அதிக பூக்கள் பூப்பதை உறுதி செய்ய, பூக்கள் உதிராமல் இருத்தல் போன்றவற்றிற்கு டிஏபி கரைசல் 2 சதவீதம் தெளிக்க வேண்டும். அவ்வாறு தெளிக்கும் போது உடன் பிளானோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக்கியை 10 லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி என்ற வீதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

ஜிப்சம் இடும் பொழுது அதை மேல் மண்ணில் மட்டும் இட வேண்டும் அதாவது 10 சென்டி மீட்டருக்கு மேல் ஆழமாக இட கூடாது.



ஆழமாக இட்டால் அதன் பயன் செடிகளுக்கு கிடைக்கப் பெறாது. வயலில் காணப்படும் பெரும்பான்மையான செடிகள் பூத்திருக்கும் தருணத்தில் (விதைத்த 35 லிருந்து 40 நாட்கள்) ஜிப்சம் அதாவது கால்சியம் சல்பேட் இட வேண்டும். போதுமான அளவு கால்சியம் சத்து கொடுத்தால் தான் சொத்தை கடலை வராமல் இருக்கும் அது மட்டுமின்றி ஜிப்சத்தில் இருக்கும் சல்பேட் நிலக்கடலையில் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கிறது.

நாம் விதைத்த ரகத்திற்கு ஏற்றவாறு 40 முதல் 60 நாட்கள் இடைவெளியில் வயலில் காணப்படும் பெரும்பான்மையான பூக்கள் உதிர்ந்து விழுதுகள் நிலத்தை நோக்கி திரும்பும் தருணத்தில் கிழக்கு மேற்கு திசையில் ஒரு முறையும் தெற்கு வடக்கு திசையில் ஒரு முறையும் சுமார் 50 கிலோ மணலுடன் கூடிய ட்ரம்மை (drum) உருட்ட வேண்டும். உருட்டுவதற்கு முன்பு மிதமான ஈரப்பதம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தலா நான்கு மடங்கு பொட்டாசியம் மற்றும் கால்சியம் மற்றும் இரண்டு மடங்கு மெக்னீசியம் சத்துக்கள் நிலக்கடலைக்கு அத்தியாவசியமாகும். ஏக்கருக்கு இரண்டு கிலோ போரான் சத்து இட வேண்டும். இது பூ பிடித்தலை அதிகரித்தல், ஒருமித்த பூப்பிடித்தல் திறன் மற்றும் காய் உருவாவதற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

நிலக்கடலை பருப்பு உட்புறத்தில் காணப்படும் நிறம் மாற்றத்தையும் இது கட்டுப்படுத்துகிறது. Cycocel/Maleic hydroxide ஏதேனும் ஒன்று தெளிக்க வேண்டும். இது செடி வளர்ச்சியை கட்டுப்படுத்தி பூ எடுத்தலை அதிகப்படுத்துகிறது.

விழுதுகள் இறங்கி காய்கள் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் இட வேண்டும். இது திரட்சியான காய்கள் பெற உதவி புரிகிறது.

இது மட்டும் இன்றி களைகளை கட்டுப்படுத்துதல், நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவதால் நல்ல மகசூல் பெற முடியும். இவ்வாறு சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அருணா தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# மின்னல் தாக்க போவதை முன்னதாக அறியலாமா?



பலரும் நினைப்பது போல மின்னல் மேகத்திலிருந்து தோன்றி அப்படியே பூமியில் உள்ளவைகளை நேரடியாக தாக்காது. மின்னல் என்பது கிட்டத்தட்ட பூமியில் உருவாகி மேலே செல்கிறது.

மேகம் + நிலம் ஆகியவற்றின் மூலமாக கண நேரத்தில் உருவாகும் மின்னல் சுமார் 30, 000 டிகிரி செல்சியஸ்க்கும் அதிகமான வெப்பத்துடன் ஒளியை உண்டாக்கும். மின்னல் காற்றை கிழித்து கொண்டு பயணிக்கும் போது காற்று உருவாக்கும் ஒலி தான் இடி.

**மின்னல் தாக்குதல் எப்படி நம்மை தாக்கும்?**

மின்னல், இடி அடிக்கும் போது நாம் வெளியே செல்கிறோம். நாம் எப்போதும் செங்குத்தாகவே நடப்போம், நிற்போம். அதே நேரத்தில் நாம் இருக்குமிடத்தில், நம்மை விட உயரமான மரம், கம்பம், வீடு என எதுவும் இல்லாத நிலையில், அப்போது மேலே அந்த (ELECTRIC CURRENT) 50 மீட்டர் தொலைவில் (மேகத் திலிருந்து) ஒரு பாதையை உருவாக்க (STREAMER) க்காக காத்து கொண்டு இருக்கும். கீழே நடக்கும் நம் தலை தான் டார்கெட்.

**முன்கூட்டிய உணர முடியுமா?**

ஆம். உணர முடியும். வெளியே நீங்க நிற்கும் போது, நடக்கும் போது, உங்கள் உடல் (STREAMER) களை வெளியிடும். அப்போது உங்களுடைய தலைமுடிகள் நேரடியாக நிலைகுத்தி நிற்கும். உங்களுடைய தோலை யாரே வருடி விடுவது போல் தோன்றும். உங்களிடம் இரும்பு சாவி, செயின், மோதிரம், கையில் டூல்ஸ் ஏன ஏதாவது இருந்தால் அவை (VIBRATE) யாகும்.

இந்த மாற்றங்களை உணர்ந்தால் உடனடியாக ஒரு இருப்பிடத்திற்கு படுவேகமாக நுழைந்து விடவேண்டும். இருப்பிடம் இல்லாத நிலையில், கீழே அமர்ந்து இரண்டு கால்களுக்கு இடையில் தலையை கீழ்புறமாக தொங்க விட்டு இரண்டு காதுகளையும் மூடி கொள்ள வேண்டும். அதாவது செங்குத்தான நிலையை மின்னலுக்கு கொடுக்க கூடாது.

இடியை மேகங்கள் உருவாக்கவில்லை, அது காற்றிலிருந்து வெளியாகிறது. மின்னல் மேகத்திலிருந்து நேரடியாக நம்மை தாக்கவில்லை. நாம் அதனை கீழே இருந்து வரவழைக்கும் ஒரு 'இணைப்புள்ளியாக' இருக்கிறோம் என்பதே உண்மை.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மனிதர் – வனவிலங்கு இணக்க வாழ்வு தேசிய ஹாக்கத்தானில் மூன்றாம் இடம்

கோயம்புத்தூர், அக்.10

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மனிதர் – வனவிலங்கு இணக்க வாழ்வை வலியுறுத்தும் நோக்கில் நடைபெற்ற National Hackathon on Human - Wildlife Coexistence: Engaging Youth for Innovative Solutions - என்ற தேசிய அளவிலான போட்டியில் மூன்றாம் இடத்தைபெற்றுள்ளது.

இந்த ஹாக்கத்தான் நிகழ்வை இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) மற்றும் இந்திய வன விலங்கு நிறுவனம் (Wildlife Institute of India WII), டேராடூன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வின் நோக்கம், இந்தியா முழுவதும் அதிகரித்து வரும் மனிதர் – வன விலங்கு தொடர்பு சவால்களை தீர்க்க இளைஞர்களின் புதுமை திறனையும் தொழில்நுட்ப அடிப்படையிலான சமூக நோக்கு தீர்வுகளையும் ஊக்குவிப்பதாகும். TNAU அணிக்கு வழங்கப்பட்ட விருது, இந்தியாவின் தற்போதைய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ்வால் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இரா.தமிழ் வேந்தன், முனைவர் அ.ரவிராஜ், முனைவர் எஸ்.கே.ராஜ் கிசோர் மற்றும் முதுநிலை மாணவர் அன்டோராஷ்வின் ஆகியோர் இணைந்து வழிகாட்டிய அணியை வாழ்த்தி பாராட்டினார். உண்மையான சுற்றுச்சூழல் சவால்களுக்கு நிலைத்த மற்றும் நடைமுறை தீர்வுகளை வழங்கிய அவர்களின் படைப்பாற்றல் மற்றும் அர்ப்பணிப்பை அவர் சிறப்பித்தார்.



அணியினர் – A Community-Friendly, Solar-Powered Deterrent System for Human - Elephant Conflict Mitigation - என்ற தலைப்பில் தங்கள் புதுமையான தீர்வை வழங்கினர். இத்திட்டம் சூரிய ஆற்றல், உணர்வி அடிப்படையிலான தொழில்நுட்பம் மற்றும் உள்ளூர் சமூகப் பங்கு பற்றுதலை ஒருங்கிணைத்து, மனிதன் – யானை இணக்க வாழ்வை நிலைத்த வகையில் ஊக்குவிக்கும் முயற்சியாகும்.


இந்த சாதனை, சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்கு பாதுகாப்பு குறித்த முக்கிய பிரச்சினைகளில் ஆராய்ச்சி, புதுமை மற்றும் இளைஞர் பங்கேற்பை ஊக்குவிக்கும் துறையில், TNAU தொடர்ந்து செய்து வரும் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்துகிறது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# நேரடி நெல் விதைப்பும் விதைப்பரிசோதனையும் – ஓர் பார்வை

தற்போதைய சூழ்நிலையில் விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக் குறையால் விவசாயப் பணிகள் சிரமமாக உள்ளது. நெல் சாகுபடியில் பெரும்பாலும் கடைபிடிக்கும் நாற்று நடவு முறைக்கு அதிக ஆட்கள் தேவைப்படுவது மட்டுமின்றி சாகுபடி செலவும் அதிகம் ஆகிறது. நேரடி நெல் விதைப்பில் டிராக்டர் கொண்டு நெல் விதைப்பு கருவி மூலம் 2 மணி நேரத்தில் 1 ஏக்கர் விதைப்பு செய்ய முடியும்.





இதனால் பண விரயமும், கால விரையமும் குறைக்கப்படுகிறது. மேலும், நடவு முறையில் அதிக தண்ணீர் தேவை உள்ளது. நேரடி நெல் விதைப்பின் தண்ணீர் பயன்பாடு குறைவது மட்டுமின்றி பயிரின் சாகுபடி காலமும் 10-20 தினங்கள் குறைய வாய்ப்பு உள்ளது. இம்முறையில் பருவமழை பெய்வதற்கு முன்னர் விதைப்பு செய்து மழை நீரைக் கொண்டே பயிரானது முளைத்து வளர்கிறது. முழுவதும் மழை நீரையே நம்பியும் கண்மாய் பாசன பகுதிகளில் நீர் நிரம்பியவுடன் பின்னர் பாசன வசதியில் சாகுபடியும் செய்யலாம். நடவு முறையில் ரூ.1 முதலீட்டில் ரூ.1.5 லாபம் பெறலாம். ஆனால் நேரடி நெல் விதைப்பில் ரூ.1 முதலீட்டிற்கு ரூ.2 வரை லாபம் பெற வாய்ப்புள்ளது.

விவசாயிகள் நேரடி நெல் சாகுபடி செய்யும் பொழுது குறுகிய காலத்தில் அதாவது 90 முதல் 110 நாட்களில் முதிர்ச்சியடையும் நெல் ரகங்களையே பயன்படுத்த வேண்டும். மேலும் பயன் படுத்த உள்ள விதைகளில் வீரிய விதைகளை தேர்வு செய்ய வேண்டும். அதாவது 600 கிராம் சாதாரண உப்பை 10 லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து பயன்படுத்த உள்ள விதைகளை நீரில் ஊற வைக்க வேண்டும். உப்புக் கரைசல் நீரில் மிதக்கும் விதைகளை எடுத்துவிட்டு கீழே தங்கியுள்ள விதைகளை உலர்த்தி பின்னர் விதைப்பு செய்ய வேண்டும். நெல் விதைகளை ஒரு சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 16 மணி நேரம் ஊற வைத்து பின்னர் உலர்த்தி இயல்பான ஈரப்பதத்தில் பயன்படுத்தும் பொழுது செடிகளானது ஆரம்பகட்ட வறட்சியை தாக்குப்பிடித்து வளர்வதற்கு உதவுகிறது. கடினப்படுத்திய விதைகளை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் பூஞ்சானக் கொல்லியினை கலந்து பயன்படுத்த வேண்டும். பருவமழை துவங்குவதற்கு முன்னரே விதைத்துவிட வேண்டும். மேலும் நேரடி நெல் விதைப்பு கருவி கொண்டு 20 செ.மீ இடைவெளியில் விதைக்க வேண்டும். நேரடி நெல் விதைப்பால் களைகள் அதிகம் முளைக்கும் என்பதால் மழை பெய்தவுடன் களை முளைக்கும் முன் பயன்படுத்தும் களைக் கொல்லி மருந்து தெளித்து களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட தொழில்நுட்பங்களைத் தவறாமல் கடைபிடித்தும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தியும் அதிக மகசூல் பெறலாம். மேலும் விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என்று மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# நெல் சாகுபடியில் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



முட்டைகள் புழு மற்றும் கூட்டுப்புழு பருவம் தாய் பூச்சி

புதுக்கோட்டை, அக்.10

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் தட்பவெப்பநிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் தண்டு துளைப்பான் மற்றும் இலைச் சுருட்டுப்புழு தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## தண்டு துளைப்பான்

குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம்பயிரில் நடுக்குருத்து வாடிக் காய்ந்துவிடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்படின் மணி பால் பிடிக்காமல் சாவி–யாகி வெண்கதிர்களாக மாறி மகசூல் பாதிப்படைகிறது. இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்திட நாற்றுகளை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து தேவையான தழைச்சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இடுதல் வேண்டும். முதிர்ந்த நாற்றுகளை நடும்போது நுனியைக் கிள்ளிவிட்டு நடுவதனால் குருத்துப்பூச்சியின் முட்டைக் குவியல்களை அழித்துவிடலாம். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை ஒளிரவிட்டுக் குருத்துப் பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம். மேலும் அதிக அளவில் குருத்துப்பூச்சியின் தாக்குதல் இருந்தால், ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50 சதவீதம் எஸ்.பி 400 கிராம் அல்லது குளோரான்டிரானி லிபுரோல் 24 எஸ்.சி 40 மி.லி., புளுபென்டையமைடு 20 சதவீதம் டபுள்யூ ஜி 50 கிராம் இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## இலைச்சுருட்டுப்புழு

இலைச்சுருட்டுப் புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்துக் கொண்டு அவற்றிலுள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாக காணப்படும். இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகமாக பயன்படுத்திய பகுதிகளிலும் மிகுந்து காணப்படும். எனவே வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலமாகவும் பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்திற்கு அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறை பிரித்து இட வேண்டும். மேலும் பறவை பந்தங்களை வைத்து பறவைகளை கவர்ந்து புழுக்களை அழிக்கலாம்.



நெல் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு புளூபெண்டியமைடு 20 டபுள்யூ ஜி என்ற மருந்து 50 கிராம் (அல்லது) புளூபெண்டியமைடு டபுள்யூ/டபுள்யூ எஸ்.சி என்ற மருந்து 20 மிலி (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரடு 50 எஸ்.பி என்ற மருந்து 400 கிராம் (அல்லது) குளோரான்ட்ரனி லிபுரோல் 18.5 எஸ்.சி என்ற மருந்து 60 மிலி இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.10

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025 - 26 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் வட்டாரம் விராதனூர் கிராமத்தில் மானாவாரி மேம்பாட்டு பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்தும் நெல், சிறு தானியங்களுக்கு உரம் பயன்பாட்டு முறையும் பயிரிடும் முறைகள் பற்றியும் விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பாரதி, வேளாண்மைத்துறை மானிய திட்டங்கள் குறித்தும் உயிர் உரப் பயன்பாடு குறித்தும் கூறினார்.

மேலும் வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு துறையில் வழங்கப்படும் மானியத் திட்டங்களை எடுத்துக் கூறினார். இயற்கை விஞ்ஞானி ஞானவேல் சாமுவேல் இராஜா, ஒருங்கிணைந்த பண்ணையம் உத்திகள் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் ரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த செயல் விளக்கத்துடன் பயிற்சி அளித்தார். பல தானிய திட்டங்கள் பயிர்களுக்கான உரப் பயன்பாடு பசுந்தாள் உயிர் உரப் பயன்பாடு ஒருங்கிணைந்த விவசாயம் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவிய தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர்.

# பாலும் - தயிரும் - ஓர் பார்வை

சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்கள் கால்நடைகளை வீட்டு விலங்குகளாக பழகி வளர்க்க ஆரம்பித்தனர்.



முதலில் கால்நடைகள் இறைச்சிக்காக வளர்க்கப்பட்டது. பின்பு கால்நடைகளிடம் இருந்து கிடைக்கும் பாலை நேரடியாக பருக ஆரம்பித்தனர். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் பாலை நேரடியாக அருந்தினால் மக்களுக்கு வயிற்று வலி மற்றும் வாந்தி ஏற்பட்டது.

இதற்கு காரணம் பாலில் உள்ள லாக்டோஸ் சக்கரை. பெருங் குடலில் உள்ள பாக்டீரியாக்களுடன் வினைபுரிந்து வயிற்றில் அதிகப்படியான வாயுவை உருவாக்கி வயிற்று உபாதைகளை ஏற்படுத்துகின்றன என்பதை மக்கள் நன்கு அறிந்தனர். இதற்கு மாற்று முறையாக பாலை புளிக்க வைத்துத் தயிராகவும் மற்றும் பாலாடைக் கட்டியகவும் பயன்படுத்தினார்கள்.

காரணம் பாலைப் புளிக்க வைப்பதன் மூலம் பாலில் உள்ள செரிமானம் ஆகாத லாக்டோஸ் என்கிற சர்க்கரை பல வேதியல் மாற்றத்திற்கு உள்ளாகிறது. இதனால் தயிர், வெண்ணெய் மற்றும் பாலடைக்கட்டி ஆகிய பால் சார்ந்த உணவுகள் குறைந்த அளவே லாக்டோஸ் கொண்டுள்ளது. குறைந்த லாக்டோஸ் கொண்ட பால் பொருட்கள் உடலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என மக்கள் உணர்ந்தார்கள்.

சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மத்திய ஆசியாவை சேர்ந்தவர்கள் முதன் முதலில் பாலை நேரடியாக அருந்தியவர்கள் என தொல்லியல் ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. ஆனால் தற்போதும் மங்கோலியவின் மேய்ச்சல் சமூகத்தை சேர்ந்தவர்கள் பாலை நேரடியாக உட்கொள்ளாமல், தயிராக மாற்றி பயன்படுத்தும் வழக்கத்தை கொண்டுள்ளர்கள்.

தகவல் : **இரா.ஜெயசங்கரமூர்த்தி, (முதுகலை வேளாண்மை), வேளாண் ஆலோசகர், கைபேசி எண் : 89404 75344, Email : agrijay102 @gmail.com.**

# பெருந்துறை வட்டாரத்தில் விதை உற்பத்தியாளர்களுக்கான விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, அக்.10

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் பாண்டியம் பாளையம் வருவாய் கிராமத்தில் விதை உற்பத்தியாளர் களுக்கான தரமான சான்றிதழ் பெற்ற விதைகள் பெறுதல் குறித்து பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சா.கலைச்செல்வி, தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் விதைச்சான்று அலுவலர் அ.தமிழரசு, பேசுகையில் அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறியதோடு அதன் நன்மைகள் மற்றும் அங்ககச் சான்று பெறுவதற்கான நடைமுறைகள் இணையதளம் மூலம் பதிவு செய்யும் முறைகள், விதை சான்றளிப்பின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம், உழவர் தொகுப்புகள் உருவாக்குதல் போன்றவற்றை தெளிவாக விளக்கிக் கூறினார்.

இயற்கை விவசாயி கணேசன், பேசுகையில் இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சிமற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் மேலும் அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்த கரைசல், ஜீவாமிர்தம் மற்றும் பூச்சி மேலாண்மை, களை மேலாண்மை பற்றிய விவரங்களையும் அவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் முறை குறித்த விவரங்களை எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# வருடாந்திர விதை திருவிழா




கடலூர், அக்.10

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வருடாந்திர விதை திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சி தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் ஆடுதுறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் மற்றும் விதைகளின் இயக்குநர் ஆகியோர் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி அருள்மணி, நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., மற்றும் நானோ ஜிங்க், பயன்படுத்தும் முறை மற்றும் நன்மைகள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும் கிசான் ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் நானோ உரங்களை எளிதாக மற்றும் துல்லியமாக தெளிக்க முடியும் என்பதும் விவசாயிகளிடம் பகிரப்பட்டது.

இதையடுத்து இப்கோ வழங்கும் சங்கட ஹரன் பீமா யோஜனா –இலவச விபத்துக் காப்பீடு திட்டம் குறித்தும் விவரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நானோ உரங்களை வாங்கும் விவசாயி களுக்கு ரூ.2,00,000 வரை இலவச விபத்து காப்பீடு வழங்கப்படும் என்றார். மேலும் உரத் துறைக்கான – வரலாற்றுச் சிறப்புமிக்க ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் – குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தார்.



# கரும்பில் சிவப்பு அழுகல் நோய் மற்றும் அவற்றின் மேலாண்மை

கரும்பு (சக்காரம் இனங்கள்) உலகின் வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் பயிரிடப்படும் ஒரு முக்கியமான பணப் பயிராகும். இது அதிக அளவு சுக்ரோஸ் அல்லது சர்க்கரையை தண்டுகளில் சேமித்து வைக்கும் திறன் காரண மாகவும், சமீபத்தில் புதுப்பிக்கத்தக்க உயிரி எரிபொருள் மூலமாக இருக்கும் எத்தனால் உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்படுவதால்




இது மதிப்புமிக்கது. உலகளவில், கரும்பு வணிக சர்க்கரையின் முக்கிய ஆதாரமாகும். இது உலக சர்க்கரை உற்பத்தியில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளது. பிரேசில் மிகப்பெரிய கரும்பு உற்பத்தியாளராக உள்ளது. இது உலக உற்பத்தியில் 40% பங்களிக்கிறது. அதைத் தொடர்ந்து இந்தியா, சீனா, தாய்லாந்து, பாகிஸ்தான், மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அர்ஜென்டினா.இந்தியாவின் பெரும் பாலான மாநிலங்களில் கரும்பு பயிரிடப்படுகிறது. மொத்த பரப்பளவு 4.2 மில்லியன் ஹெக்டேர் (னி ஹெக்டேர்).

இது பருத்திக்கு அடுத்தபடியாக, இந்தியாவின் இரண்டாவது மிக முக்கியமான வேளாண் தொழில்துறை பயிராக உள்ளது. இந்தியா உலகிலேயே மிகப்பெரிய சர்க்கரை நுகர்வோர் ஆகும். ஆண்டுக்கு சுமார் 19 மில்லியன் மெட்ரிக் டன் (மெட்ரிக் டன்) நுகர்வுடன், பிரேசிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய சர்க்கரை உற்பத்தி யாளராகவும் உள்ளது.

2009-10 ஆம் ஆண்டில் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 28 மில்லியன் மெட்ரிக் டன்னைத் தாண்டியது மற்றும் அதிகரித்து வரும் மக்கள்தொகை தேவைகளுடன், கரும்பு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இருப்பினும், பல்வேறு உயிரியல் மற்றும் உயிரியல் காரணிகள் அதன் குறைந்த மகசூலுக்கு காரணமாகின்றன, நோய்கள் கவலைக்குரிய முக்கிய காரணமாகும். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் நூறு கரும்பு நோய்கள் பதிவாகியுள்ளன. உலகின் பல்வேறு பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட பூஞ்சைகள், 10 பாக்டீரியாக்கள், 10 வைரஸ்கள் மற்றும் சுமார் 50 வகையான நூற்புழுக்கள் கரும்புப் பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகளாகும். இந்தியாவில், பூஞ்சை நோய்களால் பயிர் உற்பத்தியில் ஏற்படும் இழப்பு சுமார் 18-31% ஆகும். சிவப்பு அழுகல் என்பது கரும்பின் மிகவும் பொதுவான நோயாகும், இது கோலெட்டோட்ரிச்சம் ஃபால்கட்டம் என்ற பூஞ்சையால் ஏற்படுகிறது.

இது இந்திய துணைக் கண்டத்தில் பாதிக்கப்படக்கூடிய சாகுபடி களின் மகசூல் மற்றும் தரத்தில் கடுமையான இழப்பை ஏற்படுத்து கிறது. இது கரும்பின் எடையை 29% வரை குறைக்கலாம் மற்றும் சர்க்கரை மீட்பு இழப்பை 31% குறைக்கலாம். சிவப்பு அழுகல் நோய்க்கிருமி சேமிக்கப்பட்ட சுக்ரோஸை நீராற்பகுப்பு செய்து இன்வெர்டேஸ் என்ற நொதியை உற்பத்தி செய்கிறது, இது சுக்ரோஸ் மூலக்கூறை அதன் கூறுகளான குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸாக உடைக்கிறது. இதன் விளைவாக மொலாசஸின் அளவு அதிகரிக்கிறது. இது கரும்பின் 'புற்றுநோய்' என்று பொருத்தமாக அழைக்கப்படுகிறது.

**அறிகுறியியல்**

● பாதிக்கப்பட்ட கரும்புகள் இலைகளின் நிறத்தை பச்சை நிறத்தில் இருந்து ஆரஞ்சு நிறமாகவும், பின்னர் மூன்றாவது அல்லது நான்காவது இலையில் மஞ்சள் நிறமாகவும் மாற்றும். பின்னர் இலைகள் கீழிருந்து மேல் வரை உலரத் தொடங்கும்.

● பூஞ்சை வித்துக்கள் இலை மைய நரம்பு வழியாக இலை உறைக்குள் நுழைந்தால், இலை மைய நரம்புகளின் பின் புறத்திலும் சிவப்பு நிற புள்ளிகள் காணப்படும்.

● தொற்றுக்குப் பிறகு 16 - 21 நாட்களுக்குப் பிறகுதான் வெளிப்புற அறிகுறிகள் தோன்றும், மேலும் முழு கரும்பும் உலர 10 நாட்கள் ஆகும்.

● பாதிக்கப்பட்ட கரும்பைப் பிளந்து திறக்கும்போது, உட்புறப் பகுதி சிவப்பு நிறத்தில் இருக்கும், கரும்பின் நீளம் முழுவதும் அவ்வப்போது வெள்ளை நிற சாயல்கள் இருக்கும்.

● சில நேரங்களில், கரும்பின் உள்ளே இருக்கும் குழி கருப்பு-பழுப்பு நிற திரவத்தால் நிரப்பப்பட்டு, ஆல்கஹால் வாசனை வெளிப்படும்.

**நோய் வளர்ச்சிக்கு சாதகமான நிலைமைகள்**

● சராசரி வெப்பநிலை வரம்பு 29.4 முதல் 31ஏளீ வரை நோய் வளர்ச்சிக்கு உகந்தது

● pH 5-6

● ஆரம்ப வளர்ச்சி கட்டத்தில் வறட்சி நிலைமைகள்

● அதிக வளிமண்டல ஈரப்பதம் (90%)

● மண்ணின் நீர் தேங்கி நிற்கும் நிலைமைகள்

● களைகள் வளர வழிவகுக்கும் கலாச்சார நடைமுறைகள் இல்லாதது

● வயலில் ஒரே வகையின் தொடர்ச்சியான சாகுபடி

● சுற்றுப்புறங்களில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய வகைகள் இருப்பது

**நோய்க்கிருமி**

● சிவப்பு அழுகல் நோய் குளோமெரெல்லா டுகுமனென்சிஸ் என்ற பூஞ்சையால் ஏற்படுகிறது. சில நோயியல் நிபுணர்களால் இன்னும் பழைய பெயரான கோலெட்டோட்ரிச்சம் ஃபால்கட்டம் பரிந்துரைக்கப்படுகிறது.

● இலை உறைகள் மற்றும் இலைத் தாள்களில் காணப்படும் நோய்க்கிருமி, தனித்த அல்லது திரட்டப்பட்ட, பெரும்பாலும் வாஸ்குலர் மூட்டைகளுக்கு இடையில் குறுகிய கோடுகளை உருவாக்குகிறது.

**மேலாண்மை உத்திகள்**

● சிவப்பு அழுகலைக் கட்டுப்படுத்த சிறந்த வழி, நோயற்ற பகுதியில் ஆரோக்கியமான தாவரங்களிலிருந்து நடவு செய்வதற்கு கரணைகளைத் தேர்ந்தெடுப்பதாகும்.

● சிவப்பு அழுகல் பாதிக்கப்பட்ட வயலை ஒரு பருவத்திற்கு அரிசி மற்றும் இரண்டு பருவங்களுக்கு மற்ற பயிர்களுடன் சுழற்சி முறையில் பயிரிட வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கரும்பு வகைகளை உருவாக்கி பயன்படுத்துவதே மிகவும் பயனுள்ள உத்தியாகும், இருப்பினும் நோய்க்கிருமியின் மாறுபட்ட தன்மை இதை சவாலானதாக ஆக்குகிறது.

● பாதிக்கப்பட்ட கரணைகளை ஆரம்ப நிலையிலேயே அகற்றி, கார்பென்டாசிம் 50 WP (1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம்) கொண்டு மண்ணை நனைத்தல்

● வெட்டப்பட்ட முனைகள் மற்றும் முழு கரணைகளையும் ஒரு சதவீத போர்டோ கலவை போன்ற பூஞ்சைக் கொல்லி கரைசலில் நனைக்க வேண்டும்.

● வயலில் நோய் கண்டறியப்பட்டால், இலைகள் மற்றும் கரும்பு களை சேகரித்து எரித்து அழிக்க வேண்டும்.

● நடவு செய்வதற்கு முன் கார்பென்டாசிம் (கார்பென்டாசிம் 50 WP (1 லிட்டர் தண்ணீரில் 0.5 கிராம்) அல்லது கார்பென்டாசிம் 25 DS (1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம்) உடன் 250 லிட்டர் தண்ணீரில் 2.5 கிலோ யூரியாவுடன் கரணை சிகிச்சையை மேற்கொள்ளுங்கள்.

● கற்கணைகளை நனைக்க 52$^{o}$C வெப்பநிலையில் 0.1 சதவீத பாவிஸ்டான், பெனோமைல், டாப்சின் மற்றும் அரேட்டான் போன்ற பூஞ்சை நச்சு இரசாயனங்களை 18 நிமிடங்களுக்கு 52$^{o}$C வெப்ப நிலையில் பயன்படுத்தவும், இது அழுகல் தொற்றை கிட்டத்தட்ட முழுமையாக நீக்குகிறது.

தகவல் : **ம.பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : banumalai1996@gmail.com**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**